1986 நவம்பர் 14]

வெள்ளத்தின் காரணமாக சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு இந்த ஆண்டு அந்த வாய்க்காலின் நீளமான 10 கிலோ மீட்டரையும் முழுமையாகச் செப்பனிட்டு, பாசனத்திற்குத் தேவையான இடங்களில் ரெகுலேட்டர்களைக் கட்டி, சீர்திருத்தம் செய்யும் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சீர் செய்யும் திட்டம் அரசினுடைய கவனத்தில் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல இருக்குமானால் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்ய வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையில் இந்த ஆண்டு எத்தனை வாய்க்கால்கள் வெட்டப்பட்டு இருக்கின்றன என்ற விவரத்தை இந்த அவையில் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் படுகையில் ஏறத்தாழ 696 வாய்க்கால்கள் உள்ளன. இந்த 8 வருட காலத்தில் சுமார் 300 வாய்க்கால்களை நாங்கள் சரி செய்திருக்கிறோம். இன்னும் மீதி இருப்பதை, தமிழக முதலமைச்சர் அவர்கள் 5 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வருடத்திற்கு சுமார் 70 லட்சம் ரூபாய் செலவில் இந்த வாய்க்கால்களை செப்பனிட்டுக் கொண்டு இருக்கிறோம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா முல்லையாற்றில் வாய்க்கால் அமைத்தல்.

20—(*வினா எண். 9249) **திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுக்கா, அலங்காநல்லூர் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த பெரிய ஊர்ச்சேரி கிராமத்தில் ஓடிக்கொண்டிருக்கும் முல்லையாற்று தண்ணீரை வாய்க்கால் அமைத்து அந்த ஊருக்கு பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது துவங்கும் ?

[1986 நவம்பர் 14

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லை ஆற்றின் இரண்டு பகுதிகள் அதாவது கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் 180 ஏக்கர் நிலங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. இந்த ஆற்றில் தண்ணீர் செல்ல வாய்க்கால் இல்லாததன் காரணமாக அந்த நிலங்களைப் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு வாய்க்கால் அமைத்து அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுப்பதற்கு அல்லது லிப்ட் இர்ரிகேஷன் மூலம் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுத்து நிலங்களை விவசாயம் செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முல்லை ஆற்றினுடைய இந்த வடிகால் பகுதியும் அதனுடைய ஆயக்கட்டுகள் அத்தனையும் வலதுபுறம் அமைந்து இருக்கிறது இடதுபுறம் இருக்கின்ற பகுதிகள் வாய்க்கால் பகுதிகளை விட உயரமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே தண்ணீர் பாசனம் செய்து கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினருடைய அந்த உணர்வைப் புரிந்து பள்ளமான பகுதியிலிருந்து வாய்க்கால் அமைத்து அந்தப் பகுதிகளுக்குக் கொண்டு வந்து தரமுடியுமா என்ற சாத்தியக்கூறுகளை இந்த அரசு ஆய்ந்து பார்க்கும்.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்க்காலை அமைத்தால் அங்கே பல்வேறு கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும் என்ற காரணத்தாலே இந்தத் திட்டத்தை அரசு வெகு தீவிரமாகப் பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இருக்கின்ற தண்ணீரை எந்த எந்தப் பகுதிகளுக்குக் கொடுக்க முடியும் என்பதைப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வோடுதான் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கால்வாயின் அமைப்பே வலதுபுறமாக இருக்கின்ற ஆயக்கட்டுக்குக் கொடுக்கும் அளவுக்குத்தான் அமைந்து இருக்கிறது. ஆகவே, இடது புறமாக இருக்கின்ற பகுதிகளுக்கு எல்லாம் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். இருந்தாலும் அதனை ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

1986 நவம்பர் 14]

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் ஒரு ஆண்டுக்குத் தேவையான மெயின்டெனன்ஸ் செலவை விடக் கூடுதலாக $1\frac{1}{2}$ பங்கு, 2 பங்கு செலவு செய்து திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்று விடுவதாக சொல்கிறார்கள். எனவே, தொடர்ந்து 2 பங்கு 3 பங்கு ஒரு ஆண்டுக்கு உரிய மெயின்டனன்ஸ் காஸ்ட்டை விட கூடுதலாக செலவு செய்து விடுகிற காரணத்தால் 2 ஆண்டு காலத்திற்கு வருகின்ற அந்த மெயின்டனன்ஸ் செலவு ஒரு ஆண்டிலேயே வேலை செய்து விடுவதாக சொல்லி தொடர்ந்து அந்தப் பணத்தை எடுத்து விடுகிற முறை பொதுப்பணித் துறையில் இருப்பதாகவும், அதன் காரணமாக 2, 3 ஆண்டுகளுக்கு மெயின்டெனன்ஸ் வேலை செய்ய முடியாத அளவுக்கு ஒரு ஆண்டிலேயே வேலையை முடித்து விடுவதாக எஸ்ட்டிமேட் ஒப்புதல் பெற்று பணத்தை எடுக்கிற காரணத்தால் இது போன்ற சங்கடங்கள் பொதுப்பணித் துறையில் இருப்பதாக நான் அறிகிறேன். எனவே அப்படிப்பட்ட நிலை நீடிக்கப்படும் என்று சொன்னால் 3 ஆண்டுக் காலம் பொதுப்பணித் துறை பாதுகாப்பு அற்ற நிலை ஆகிவிடும். எனவே, அரசு மறு பரிசீலனை செய்து அந்த அந்த ஆண்டுக்கு உரிய மெயின்டெனன்ஸ் செலவைத் தான்செய்ய வேண்டும் என்ற உத்திரவை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல் செயல்பட முடியவில்லை. காரணம் அவசியம் என்று வருகிற நேரத்தில் மெயின்டெனன்ஸ் நாம் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குக் கூடுதலாக அரசு நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமா என்று மட்டும் ஆய்ந்து பார்க்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்குப் பிறந்தநாள் புகழ் அஞ்சலி

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, தேசப் பிதா காந்தி அடிகளால் தன்னுடைய அரசியல் வாரிசு என்று அறிவிக்கப்பட்டவரும், உலகப்புகழ் மிக்க வரலாற்று நூல் ஆசிரியராகவும், நாட்டின் சுதந்திரத்திற்காக பன்னெடுங்காலம் சிறை இருந்த செம்மலாகவும், இந்திய திருநாட்டின் முதல் பிரதமராகவும், ஐந்தாண்டு திட்டங்களின்